நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு

புரட்பாதி - ஐப்பசி 2017 | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 47



# மீண்டும் திருத்தப்படும் தொழிலாளர் சட்டங்கள்!

பிரான்ஸ் 5வது குடியரசில் முதல் முறையாக மாபெரும் சட்ட சீர்திருத்தப் பரிந்துரைகளுக்கு அதிபர் இம்மனுவல் மக்ரோன் கையொப்பமிட்டுள்ளார்.

அதிபர் தொலைக்காட்சி நேரலையில் கோப்புகளுக்கு கையொப்பமிட்டுள்ளார். அமெரிக்கா போன்ற நாடுகளில் இத்தகைய நேரலைக் கையொப்பமிடுதல் பிரபலமெனினும் பிரான்சில் இது முதல் முறையாகும்.

அரசியல்வாதிகளின் அறநெறி சட்டமூல மாற்றங்களைத் தொடர்ந்து இம்முறை தொழிலாளர் சட்ட மூல சீர்திருத்தங்களுக்காக கையொப்பமிடப்பட்டுள்ளது.

தொழில்துறை அமைச்சர் Muriel Pénicaud முன்னிலையில் கையொப்பமிட்ட அதிபர், பிரான்சின் பொருளாதாரத்திற்கும், சமுதாயத்திற்கும் இன்றியமையாத சீர்திருத்தங்கள் இவையெனவும் இத்தகைய சீரான திருத்தங்களை பிரான்சில் இதுவரை எவரும் முன்வைக்கவில்லை எனவும் நம்பிக்கையளித்துள்ளார்.

இத்திருத்தத்தின்மூலம் நான்கு அடிப்படைக் கூறுகளில் மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

1. முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான பரஸ்பர உரையாடல் மூலமான தீர்வுகள்.
2. சிறிய வணிக நிறுவனங்கள் நடுத்தர நிறுவனங்களுக்கான நடைமுறைத்தீர்வுகள்.
3. தொழிலாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான புதிய சட்ட உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள்.
4. ஏற்படவிருக்கும் மாற்றங்களால் தொழிற்சங்கங்களுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமான புதிய வாய்ப்புகள்.

உங்கள் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழிகாட்டுதலை உங்களுக்கு வழங்குகின்றோம். வழிகாட்டுதலை சரியான முறையில் செயற்படுத்துவது உங்கள் கைகளிலேயே உள்ளது என அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

சராசரியாக 20 புதிய திருத்தங்களுடன் மாற்றங்கள் இவ்வருட இறுதிக்குள் அமுலுக்கு வரவுள்ளன.

அதிபர் இம்மனுவல் மக்ரோன் கையொப்பமிட்டுள்ள மாற்றங்கள் பிரான்சில் தவிர்க்க முடியாத சமூகப் பின்னடைவுகளை ஏற்படுத்தும் என France Insoumise கட்சித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான Jean Luc Mélenchon எச்சரித்துள்ளார். மேலும், இளையோர் முதியோர் என்ற பாகுபாடுகளின்றி பிரான்ஸ் மக்கள் அனைவரும் வீதிகளில் இறங்கி எதிர்ப்பைப் பதிவு செய்து பிரான்ஸ் அரசின் தொழிலாளர் சட்ட மாற்றங்களை எதிர்க்க வேண்டுமெனவும் அறைகூவல் விடுத்துள்ளார்.



நவம்பர் மாதத்திலிருந்து

## மருத்துவ ஆலோசனைக் கட்டணம் அதிகரிக்கின்றது!

நீண்ட கால நோய்கள், "சிக்கலான" அல்லது "மிகவும் சிக்கலான" நோய்கள் என வகைப்படுத்தப்பட்டு அதன்படி மருத்துவ ஆலோசனைக் கட்டணம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அடிப்படை மருத்துவ ஆலோசனைக் கட்டணமான 25யூரோக்களில் எந்த மாற்றமும் இல்லை.

உடற்பருமன் நோய்க்கான ஆபத்துடைய மூன்று தொடக்கம் 12 வயது சிறுவர்கள், கருத்தடை மற்றும் பாலியல் தொற்றுநோய் தொடர்பான பதின்ம வயதினருக்கான ஆலோசனைகள் மற்றும் 28 நாட்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கான தொடர் ஆலோசனைகள் போன்றன "சிக்கலானது" என வகைப்படுத்தப்பட்டு அதற்கான கட்டணம் 46 யூரோக்களாக மாற்றப்பட்டுள்ளது.

ஆஸ்துமா, தீவிர கண்வருத்தம், கருவுறு சிகிச்சைகளுக்கான ஆலோசனைகளுக்கு மேலதிகமாக 16 யூரோக்கள் அறவிடப்படும்.

புற்றுநோயைக் கண்காணித்தல் போன்ற "மிகவும் சிக்கலான" நோய்களுக்கான கட்டணம் 60யூரோக்கள் ஆகின்றது. அதைவிட நீண்ட கால நோய்களுக்கான கட்டணம் 56யூரோவிலிருந்து 70யூரோக்கள் ஆகின்றது. வைத்தியர்கள் பற்றாக்குறை, வேலைத் தளங்களில் வசதிக் குறைவு போன்றவற்றை

3ம் பக்கம் பார்க்க..

நிலா
www.nilafrance.com
தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com




# பால் வேறுபாடற்ற பொதுக் கழிப்பறைகள் அறிமுகம்!

பிரான்சின் மத்திய மேற்குப் பகுதியில் Tours பல்கலைக்கழகம் இருபாலாருக்கும் பொதுவான மலசலகூடத்தை பிரான்சில் அறிமுகம் செய்துள்ளது. இதன்மூலம் மூன்றாம் பாலின மாணவர்கள் வேறுபாடுகளின்றி வாழக்கூடிய சௌகரியமான சூழல் ஏற்படுத்தப்படுவதாகவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பால் வேறுபாடற்ற கழிப்பறைகளை அறிமுகம் செய்தது மட்டுமன்றி மூன்றாம் பாலின மாணவர்கள் தாங்கள் விரும்பும் பெயரை மாணவர் அடையாள அட்டை மற்றும் பதிவேடுகளில் குறிப்பிடுவதையும் இந்த வருடத்திலிருந்து அங்கீகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக அதிகாரிகளிடம் மூன்றாம் பாலின மாணவி ஒருவர் வைத்த உருக்கமான வேண்டுகோளை அடுத்தே இந்த மாற்றங்கள் பற்றி பரிசீலிக்கப்பட்டுள்ளது.

**"நான் எனது கதையைக் கூறினேன், நான் கடந்து வந்த கடினமான பாதை பற்றிக் கூறினேன். பல்கலைக் கழகத்தில் என் போன்ற மூன்றாம் பாலின மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கூறினேன். பல்கலைக்கழகமே வாழ்க்கையை மாற்றியமைக்கும் ஓர் இடம். நாங்கள் எங்கள் வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கும் காலம். இங்கே எங்கள் பாலின அடையாளம் சமூகத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது என்பதை நாங்கள் உணரவேண்டியது மிக முக்கியம்"** என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் பாலினத்தவர் மீது வெறுப்பை வெளிப்படுத்துவது அல்லது அனைத்துவகையான துன்புறுத்தல்களும் பிரான்சில் கிரிமினல் குற்றமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

---



### பிரான்சின் புதிய சட்டத்தின் பிரகாரம்

## அரசியல்வாதிகள் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு இனிமேல் வேலைவாய்ப்புக்களை வழங்க முடியாது.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அதாவது தனது பெற்றோருக்கு, மனைவிக்கு அல்லது பிள்ளைகளுக்கு வேலை வழங்குவாரேயானால் இனிமேல் 45000 யூரோக்கள் அபராதமும் மூன்று வருட சிறைத்தண்டனையும் வழங்கப்படும் என புதிய சட்டம் குறிப்பிடுகின்றது.

தூரத்துக் குடும்ப உறுப்பினர் ஒருவரை, உதாரணத்திற்கு மனைவியின் குடும்ப உறுப்பினர் அல்லது உறவினர் ஒருவருக்கு வேலை வழங்க இருப்பின் தெரியப்படுத்தப்படவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதே போன்று ஒரு அமைச்சரின் குடும்ப உறுப்பினரை இன்னொரு அமைச்சர் பணிக்கு அமர்த்துவதானாலும் கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத்தில் பலரும் இச்சட்டத்தை ஆதரித்திருந்தாலும் சில எதிர்ப்புக்களும் இருந்தன. "ஒரு பன்றி நோய்வாய்ப்பட்டுவிட்டால் பட்டியில் உள்ள அனைத்துப் பன்றிகளையும் கொல்ல ஆணையிடுவது போல் உள்ளது" என குடியரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் எதிர்ப்பை வெளியிட்டிருந்ததும் கவனத்தை ஈர்த்திருந்தது.



## பிரான்சில் 'மகளிர் மட்டும்' போக்குவரத்து சேவை

**பாரிசில்** "மகளிர் மட்டும்" போக்குவரத்து சேவை முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரக்ஸியில் இடம்பெறும் பெண்கள் மீதான துஸ்பிரயோகங்களுக்கு விடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெண் சாரதிகளுடன் பல பிரத்தியேக வசதிகளையும் உள்ளடக்கிய பெண்களுக்கான சேவையாக இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலப்போக்கில் இது பிரான்ஸின் அனைத்துப் பகுதிகளிலும் அறிமுகமாகும் என நம்பப்படுகின்றது.

## இப்படியும் நடந்தது...

**"அன்பின் றெய்மன்,**
**சாலை நெறிசல்களைத் தாண்டி ஒருபடியாக மேரி லுாயிஸ் வீட்டை வந்தடைந்தோம். அவர்கள் வீட்டில் மதிய உணவு விருந்துக்கு வந்தோம், நாளை புறப்படுகின்றோம்"**

1974.05.21 அன்று நீஸிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட மேற்படி செய்தியுடனான தபால் அட்டை 43 வருடங்கள் கழித்து யூலை 22, 2017 இல் சேர வேண்டிய இடத்தைச் சேர்ந்துள்ளது.

1300கி.மீற்றர் தொலைவில் உள்ள Brittany நகரில் உள்ள முகவரிக்கே இந்த தபால் அட்டை 43 வருடங்களாகப் பயணித்துள்ளது. உள்ளூரில் பணியாற்றும் தபாலாளர் ஒருவர், முகவரியில் உள்ள பெயரையும் தபாலில் பதிந்துள்ள முத்திரை, சீல் போன்றவற்றையும் உற்றுநோக்கிய போதே அதிர்ச்சி வெளிப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள Raymond Côtard என்ற பெயருக்கான நபரை இதுவரை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

தன்னால் இயன்றவரை இந்தத் தபால் அட்டைக்கு உரியவர்களைத் தேட உள்ளதாகவும் முடியா விட்டால் ஒரு பொக்கிசமாகத் தான் இதைப் பேண உள்ளதாகவும் அந்தத் தபால் ஊழியர் தெரிவித்துள்ளார்.

---

**சகித்து வாழ்வது வாழ்க்கையல்ல**
**ரசித்து வாழ்வதே வாழ்க்கை**

---

# “ ராணி மகா ராணி



இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் அரசி, இளவரசர் சார்ள்ஸ், இளவரசர்கள் வில்லியம், ஹரி மற்றும் கேட் மிடில்ரன் ஆகியோர் எத்தருணத்திலும் குறிப்பிட்ட சில உணவு–களை சாப்பிட முடியாது.

அதீத உறைப்பு, உப்பு, இனிப்பு என என்ன வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் உண்ண முடியும். ஆனால் கடல் உணவுகள் குறிப்பாக சிப்பிகள் மற்றும் இறால் முதலியவை, நன்றாக வேக வைக்காத இறைச்சி வகைகள் போன்றவற்றை எக்காரணம் கொண்டும் தொட முடியாது. இன்னும் அரண்மனையில் அல்லது வெளிநாட்டுப் பயணங்களில் கூட குழாயில் வரும் தண்ணீரை அருந்தக்கூடாது.

இவ்வுணவுகள் மற்றும் குழாய்த்தண்ணீர் உணவு ஒவ்வாமைத் தன்மைகளை ஏற்படுத்தக்கூடும். உணவு ஒவ்வாமையினால் அரச குடும்பத்தினரின் நாளாந்த அரச செயற்பாடுகள் தடைப்படும் என்ற காரணத்தினால் இத்தடை கடுமையாகப் பின்பற்றப்படுகின்றது. ஆனால் ராணி அருந்தும் மற்றைய நீராகாரங்களில் எந்தவிதமான தடைகளும் இல்லை. ஒரு நாளுக்கு நான்கு Cocktails என்பது நாளாந்தமாகும். மதிய சாப்பாட்டிற்கு முன் ஒரு ஜின், உணவு மேசையில் ஒரு கிளாஸ் வைன், மாலையில் ஒரு Dry Martini, இரவு படுக்கைக்கு முன்னர் ஒரு கிளாஸ் சம்பெயின். ஒவ்வொரு குடிவகைக்கு முன்னரும் "தரமான உயர்தர" எனச் சேர்த்துக்கொள்ளவும்.

இங்கிலாந்து ராணி ஒரு நாளுக்கு 6 அலகு அல்ககோல் நுகர்பவராக உள்ளார். ஆனால் இங்கிலாந்து சுகாதாரத்துறை அமைச்சரோ வாரத்திற்கு 14 அலகு அல்ககோலுக்கு அதிகமாக அருந்தாதீர்கள் என மக்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

யாராவது கேள்வி கேட்டால் ராணியோ ஒரு சிறிய புன்னகையுடன் அதுதான் என் இளமையின் இரகசியம் என முடித்துக் கொள்கிறார்.

**பிரான்ஸ் அதிபர்** இம்மனுவல் மக்ரோனின் 3 மாத மேக்கப் செலவீனமாக 26000 யூரோக்கள் கணக்கு காட்டப்பட்டுள்ளது. இம்மனுவல் மக்ரோன் சிகை அலங்காரம் மற்றும் பிரத்தியேக அழகுபடுத்தல் தேவைகளுக்காக ஒப்பனை நிறுவனம் ஒன்றை சேவைக்கு அமர்த்தியிருந்தார். ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் வெளிநாட்டுக்குச் சென்றால் கூட ஒப்பனைக்கலைஞர் அதிபருடன் நிச்சயம் பயணிப்பார்.



ஒப்பனையாளரின் பயணச்செலவு உட்பட அனைத்திற்கும் 26 ஆயிரம் யூரோக்கள் கணக்குக் காட்டப் பட்டுள்ளது. இச்செலவீனம் முன்னைய பிரான்ஸ் அதிபர்களின் மேக்கப் செலவீனங்களை விட ஒன்றும் அதிகமானது இல்லை என அதிபரின் பிரத்தியேக செயலாளர் தெரிவித்துள்ளார்.

**மேக்கப் செலவீனம் 26000 யூரோ**

உதாரணமாக முன்னாள் அதிபர் பிரான்சுவா ஹொலந்த் ஒப்பனையாளர் ஒருவரை மாதாந்தம் 6000 யூரோ (நெற்) ஊதியத்திற்கு வேலைக்கு அமர்த்தியிருந்தார். செலுத்த வேண்டிய வரிகள் என அனைத்தையும் சேர்த்தால் 3 மாதங்களுக்கு 30000 யூரோ செலவீனமாகும். இவரை விட சிகை அலங்காரத்திற்காக ஒருவர் மாதம் 9895 யூரோ (Bruts) ஊதியத்துடன் பணியிலிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது அதீத செலவீனமாகக் கருதப்பட்டாலும் ஒரு நாட்டை குறிப்பாக பிரான்சைப் பிரதிநிதிப்படுத்தும் அதிபரின் வெளித்தோற்றம் மிகவும் முக்கியமாகும் என அதிபரின் செயலகம் இச்செலவீனத்துக்கு நியாயம் கற்பித்துள்ளது.

1ம் பக்கத் தொடர்ச்சி..

காரணம்காட்டி அண்மையில் வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து வர்த்தக அமைப்புக்கள், சுகாதாரக் காப்பீட்டு நிறுவனங்களுடனான ஆலோசனையை அடுத்து இந்த மாற்றம் அமுலுக்கு வருகின்றது.

இருப்பினும் முழுத் தொகையும் நோயாளி மீது சுமத்தப்பட மாட்டாது. அனேகமான நிலைமைகளில் 70 வீதம் காப்பீட்டு நிறுவனங்களால் செலுத்தப்படும். நீண்ட கால நோயாளிகள் 100 வீதப் பணத்தையும் திருப்பிப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**சங்கீதா அச்சகம்**

**39, Bd. de la Chapelle**
**75010 Paris**
M°: La Chapelle
sangeethafrance@gmail.com
**Tél. / Fax :**
**01.44.72.08.94**



# வேகமீறல் கண்காணிப்புகள்
## தனியார் வசம்

பிரான்சில் இன்றுவரை பாதுகாப்புத் துறையினர் மற்றும் வீதி ஒழுங்கு நிர்வாகத்துறையினரால் மட்டுமே வேகமீறல் கண்காணிப்புகள் மேற் கொள்ளப்பட்டு வந்தன. இவ் வருடம் முதல் தனியார் நிறுவனங்கள் கண்காணிப்பு சேவைக் காக உட்படுத்தப்படவுள்ளன.

ராடர்கள் பொருத்தப்பட்ட வாக னங்கள் வீதிகளில் சென்ற வண்ணமே எமது வாகன வேகமீறலைக் கண்காணித்துப் புகைப்படம் எடுத்து எமது அபராதங்களை வீடுகளுக்கு அனுப்பிவிடும்.

ஒரு புதிய ராடரின் விலை 70 ஆயிரம் யூரோக்கள், வருடாந்த பராமரிப்புச் செலவு 18 ஆயிரம் யூரோக்கள் மற்றும் இரண்டு பாதுகாப்பு துறையினரின் பணிநேரம் என செலவு செல்கிறது. வேகக் கண்காணிப்பு அரசுக்கு பெருஞ் செலவீனமாக இருப்பதனால் இக் கண்காணிப்பு முறையை தனி யார் மயப்படுத்தியுள்ளது.

இக்கண்காணிப்பு முறை பாதுகாப்புத் துறையினரால் ஒரு நாளுக்கு ஒரு மணிநேரமே பின்பற்றப்பட்டு வந்தது. தற்போது தனியார் நிறுவனங்களால் நாளுக்கு 8 மணிநேரம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. இப் பணிக்காக 440 வாகனங்கள் சேவையில் அமர்த்தப்படவுள்ளன. இவ்வாகனங் களால் பெரும்பாலும் *nationale* வீதிகள் *départementale* வீதிகள் மற்றும் ஆபத்தான வீதிகளே கண்காணிக்கப்படவுள்ளன.

இம்மாற்றத்தால் தற்போது வருடத்திற்கு 1, 5 மில்லியனாக இருக்கும் வேகமீறல் அபராதங்கள் **(PV)** 2018 கடைசியில் 6 மில்லியனாக உயரும். இது அரசுக்கு 2.2 மில்லியாட் வருமானத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது. சென்ற ஆண்டில் அரசு வீதி ஒழுங்கு மற்றும் பாதுகாப்புக்காக 3, 4 மில்லியாட் யூரோக்களை செலவு செய்தது. இருப்பினும் 920 மில்லியன் யூரோக்களே அபராதங்கள் மூலம் கிடைக்கப்பெற்றதாக அரசு தெரிவித்துள்ளது.

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் நோர்மன்டிப் பகுதியில் முதற்கட்ட கண்காணிப்பு ஆரம்பமாகியுள்ளது. வருட இறுதியில் முதலாவது **PV** அனுப்பப்படும் எனவும், 2018 இறுதிக்கு முன்னர் பிரான்ஸ் முழுவதும் அமுல்ப்படுத்தப்பட்டுவிடும் எனவும் அரசு தெரிவித்துள்ளது.

**பொய்களால் தடவிக் கொடுப்பதைவிட, உண்மையால் அறைவதே மேலானது...**

## பாடசாலை வளாகங்களுள் புகைப்பிடிப்பதற்கான தடையை நீக்கமுடியாது!

Collèges மற்றும் Lycées வளாகங்களுக்குள் புகைப்பிடிப்பதற்கான தடையை நீக்குமாறு கல்லூரி நிர்வாகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பிரதமர் அலுவலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பின்மை காரணங்களால் பிரான்சில் தேசிய பாதுகாப்பு எச்சரிக்கையை இன்னும் இறுக்கமாக செயற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பாடசாலைகளுக்கு முன்னால் மாணவர்கள் கூட்டமாக நிற்பதைத் தவிர்க்க வேண்டும். இது கல்லூரி நிர்வாகத்தின் முக்கிய கடமையாகும் எனவும் பிரதமர் வலியுறுத்தியிருந்தார்.

மாணவர்கள் பெரும்பாலும் பாடசாலை வளாகங்களுக்கு முன்னால் கூடுவது புகைப்பிடிப்பதற்காகத்தான் எனக்குறிப்பிட்ட கல்லூரி நிர்வாகம், இந்நிலையைத் தவிர்க்க வேண்டுமாயின் மாணவர்களை வளாகத்துக்குள் புகைப்பிடிக்க அனுமதிக்க வேண்டும்! எனத் தெரிவித்து தடை உத்தரவை விலக்க விடுக்கப்பட்ட கோரிக்கையே இவ்வாறு மறுக்கப்பட்டுள்ளது.

நீண்ட போராட்டத்திற்குப் பின்னர் 15 நவம்பர் 2006ல் அமுல்ப்படுத்தப்பட்ட பாடசாலை வளாகங்களுள் புகை பிடிக்க முடியாது என்ற தடை உத்தரவு எக்காரணம் கொண்டும் விலக்கப்பட மாட்டாது எனத்தெரிவித்த பிரதமர் Édouard Philippe மாணவர்கள் மத்தியில் புகைப்பிடித்தலுக்கு எதிரான பிரச்சாரத்தை கற்பிதமாக கொண்டுவருவதற்கான திட்டத்தை கல்வி அமைச்சர் Jean-Michel Blanquer மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் Agnès Buzynயுடன் இணைந்து மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.



# இனவாதிகள் மற்றும் ஆதிக்கவாதிகளின் அடையாளங்களை அகற்றுக!

மேற்படி கோரிக்கை பிரான்சில் Conseil représentatif des associations noires de France (CRAN) என்ற அமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் Charlottesvilleல் இடம்பெற்ற நிகழ்வு பிரான்சில் அதிர்வாக எழுந்துள்ளது.

பிரான்சில் இவ்வகையான அடையாளங்களுக்குக் குறைவில்லை. உதாரணமாக பிரான்ஸ் பாராளுமன்ற நுழைவாயிலை அலங்கரிக்கும் Colbertன் சிலை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. Colbert ன் பெயரில் வீதிகளில் இன்னும் பல கல்வியகங்களும் (Lycée) உள்ளன. இவை அனைத்திலிருந்தும் Colbert ன் பெயர் அகற்றப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



Colbert என்பவரே அடிமைத்துவச் சட்டமூலமான code noir எனும் சட்டமூலத்தின் தந்தையாகும். இச்சட்டத்தினூடாகவே பிரான்சில் அடிமை வியாபாரம் கொடிகட்டி பறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**தவறாய் புரிந்துகொள்வதைவிட புரிந்துகொள்ளாமலே இருப்பது மேலானது...**

## பிரான்ஸ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வு!

பிரான்ஸ் வாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் தற்போதைய கணிப்புக்களின் படி சற்றே உயர்ந்திருப்பதாக தெரியவந்தாலும் கூட 2008ஆம் ஆண்டில் இருந்ததை விடக் குறைவாகவே உள்ளதாக தேசிய புள்ளியியல் மையமான Insee தெரிவித்துள்ளது.

ஆகக் குறைந்த வாழ்வாதாரத்தைக் கொண்ட பிரான்சின் 10வீத மக்கள் வருடத்திற்கு 10,860 யூரோக்களை சம்பாதிக்கும் அதேவேளை அதிகூடிய பணக்காரர்களாயிருக்கும் 10 வீதமானோர் மூன்றரை மடங்கு அதிகமாக 37,510 யூரோக்களை சம்பாதிக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மகப்பேறு விடுப்பு மாற்றங்கள்



புதிய சட்டமூல மாற்றங்களால் மகப்பேறு விடுப்புகளில் மாற்றங்கள் ஏற்படவுள்ளன. இதுவரை முதல் இரு குழந்தைகளுக்கு மகப்பேறுக்கு முன்னர் 6 வாரங்கள் பின்னர் 10 வாரங்கள் என்பது வரைமுறை.

தற்போது இவற்றில் மாற்றம் இல்லை எனினும் சில நிறுவனங்களில் இவற்றை விடவும் கூடுதலான விடுமுறைகள் உதாரணமாக வங்கி வேலையாளர்களுக்கு மேலும் 45 நாட்கள் மற்றும் அரைவாசிச் சம்பளத்துடன் 90 நாட்களும் விடுப்பு எடுக்க முடியும் இவற்றையெல்லாம் மாற்ற நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கலைவண்ணம் – 2017**

**10. 12. 2017**

30, rue Lopez et Jules Martin

*Space Reanaudi*

M° : Fort Aubervilliers



## பாரிசின் மிக ”அழுக்கான” கட்டடம்

என ஏளனம் செய்யப்படும் மொம்பர்னாஸ் கோபுரம் புதுப் பொலிவு பெறவுள்ளது. 1970களில் கட்டப்பட்ட 210 மீற்றர் உயரமான இந்த வானுயர்ந்த கட்டடம் 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு 300 மில்லியன் யூரோக்கள் செலவில் புனரமைக்கப்படவுள்ளது. அதன் புதிய பரிணாமத்திற்கான வடிவமைப்பு சர்வதேச கட்டடக் கலைஞர்களிடம் கோரப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 700 கட்டட வடிவமைப்பு நிறுவனங்கள் போட்டியிட்டு Nouvelle AOM மற்றும் Studio Gang ஆகிய நிறுவனங்கள் இறுதியில் ஒன்றோடொன்று மோதியிருந்தன. நான்கு மாத ஆலோசனைகளின் பின்னர் Nouvelle AOM எனும் பிரான்ஸ் கூட்டு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1973இல் திறந்து வைக்கப்பட்ட மொம்பர்னாஸ் அந்தக் காலப்பகுதியில் புதுமை, நவீனத்துவத்துவம், மாற்றத்திற்கான சின்னமாக இருந்ததாகவும் 40 ஆண்டுகளின் பின்னர் நிலைமை தலைகீழானதாகவும் கட்டட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். 2019ஆம் ஆண்டில் இதன் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2024ஆம் ஆண்டு நிறைவு காணவுள்ளது.




அண்மையில் Charlottesvilleல் அமெரிக்க அடிமைத்துவப் பிரபுகளில் ஒருவரான Robert Lee ன் சிலை அகற்றுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. நீண்டகால கறுப்பின மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளின் போராட்டங்களால் இவ் அகற்றல் சாத்தியமாகியிருந்தது. சிலையை அகற்றக்கூடாது என இனவாத அமைப்புகளும் ‘Néo-nazis’ க் குழுவினரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத் தருணத்தில் இனவாத எதிர்ப்பாளர்களும் எதிர்த்து நின்றனர். néo-nazis களில் ஒருவர் காருடன் கூட்டத்திற்குள் புகுந்ததில் Heather Heyer எனும் இளம்பெண் கொலை செய்யப்பட்டார். இந்நிகழ்வுக்கு எதிராக உலகெங்கும் எதிர்ப்புகள் மக்களாலும், ஆட்சியாளர்களாலும் முன்வைக்கப்பட்டுவருகின்றது.




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

Notre-Dame de Paris



# இடிந்து போகும் ஆபத்தில்...

## பேராலயம்

850 ஆண்டுகள் பழமை வாய்ந்த உலகின் பிரசித்திபெற்ற பாரிஸ் நகரின் பிரபலமான பேராலயம் Notre-Dame de Paris இடிந்து போகும் ஆபத்திலுள்ளதாக எச்சரிக்கப்படுகிறது. வருடத்திற்கு 12 மில்லியன் மக்களை வரவேற்கும் Notre-Dame de Paris நீண்டகாலமாக சரியான பராமரிப்புகள் இல்லாததால் தனது வயோதிபத்தை எட்டி நிற்கிறது.

1163ல் ஆரம்பமான கட்டிடப்பணிகள் முடிவுக்கு வந்து 1345ம் ஆண்டிலேயே மக்களின் பார்வைக்காக திறக்கப்பட்டது. 128 மீற்றர் நீளமும், 48 மீற்றர் அகலமும், 96 மீற்றர் உயரமும் கொண்ட Notre-Dame de Paris கட்டப்பட்ட காலகட்டத்தில் பலமுறை பிரெஞ்சு புரட்சியாளர்களால் சேதமாக்கப்பட்டு மீண்டும் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.

உலகெங்கும் பிரான்சின் «பிரெஞ் கொத்திக்» கட்டட சிற்ப வடிவமைப்பிற்கு பிரபலமான Notre-Dame de Paris மீள் நிர்மாணம் செய்ய 114 மில்லியன் யூரோக்கள் தேவைப்படுவதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் அரச சொத்துக்களில் ஒன்றான இத் தேவாலயத்திற்கு பிரான்ஸ் கலாச்சார அமைச்சு வருடத்திற்கு 2, 28 மில்லியன் யூரோக்களை பராமரிப்பிற்காக வழங்கி வருகின்றது. இருப்பினும் இத்தொகை அன்றாடச் செலவுகளுக்கே போதுமானதாகவுள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

2012ல் 850 வருட கொண்டாட்டங்களுக்காக கோயிலின் 13 தொன் நிறையுடைய புதிய மணிகள் மாற்றியமைக்கப்பட்டன. இருப்பினும் மேலும் மக்களை தன்பக்கம் இழுப்பதற்கும் பிரான்சின் கட்டிடக்கலையின் பெருமையை வெளிப்படுத்துவதற்கும் முற்றிலுமான புனரமைப்பு முக்கியமாகும் எனக் கலாசார அமைச்சினர் தெரிவித்துள்ளனர். பராமரிப்பு திருத்த வேலைகளுக்கு தேவையான 114 மில்லியன் யூரோக்களைத் திரட்டுவதற்கான பொறுப்பை பிரான்சின் பிரபல கட்டடக்கலைஞர் Picaud ன் தலைமையிலான குழு முன்னெடுத்துள்ளது. வரும் ஐந்து வருடங்களுக்குள் இந்நிதி திரட்டப்பட்டு செயற்படுத்தப்படும் எனவும் 'Friends of Notre-Dame de Paris' அமைப்பு தெரிவித்துள்ளது. பெரும்பாலான நிதி அமெரிக்காவில் திரட்டப்படும் எனவும் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

N.M.J



# ஐரோப்பா - அமெரிக்கா மீது வடகொரியா அணு ஆயுத தாக்குதல்?

**வடகொரியா** கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஆயுதச் சோதனையில் வெற்றியடைந்து சர்வதேசத்திற்கு தொடர்ந்து அச்சுறுத்தல் கொடுத்து வருவதையடுத்து பல நாடுகளும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

வடகொரியா வெகுவிரைவில் ஐரோப்பா மீதும், அமெரிக்கா மீதும் அணு ஆயுத தாக்குதல் நடாத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என பிரான்ஸ் வெளிவிவகாரத்துறை அமைச்சர் Jean-Yves Le Drian தெரிவித்திருந்தார். இதையடுத்து அதிபர் இம்மனுவல் மக்ரோன் ஐக்கிய நாடுகள் சபையிடம் வடகொரியா மீது உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இத்தனை காலமும் அமெரிக்காவிடமே எதிர்ப்பைக் காட்டி வந்த வடகொரியா இம்முறை பிரான்சின் பக்கம் திரும்பியுள்ளது. அணு ஆயுதம் பாதகமானது, ஆபத்தானது என பிரான்ஸ் கருதினால் அணுஆயுதக் கொள்கையை பிரான்ஸ் முதலில் கைவிடட்டும். அதேவேளை எம்மிடம் அணு ஆயுதம் உள்ளது என்ற ஒரு காரணத்திற்காக நாம் தாக்குதல் நடத்துவோம் என எண்ணத்தேவையில்லை எனவும் வடகொரிய உயர் அதிகாரி Ri Tok Son தெரிவித்துள்ளார்.

Ri Tok Son ன் எதிர்க்கருத்தைத் தொடர்ந்து அணு ஆயுத கொள்கைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுப்பாடுகளை வடகொரியா மீறும் பட்சத்தில்
- எண்ணெய்த்தடை (பெற்றோல், டீசல்)
- நெசவுத்துணி இறக்குமதித் தடை
- வடகொரிய மக்களை நாடுகளிலிருந்து வெளியேற்றுதல்
- வடகொரியத் தலைவர் Kim Jong Unன் சொத்துக்கள் மீதான முடக்கம்
- இன்னும் வடகொரிய கடற் பிராந்தியக் கண்காணிப்புகள்

எனப் புதிய தடைகளை உடனடியாக அமுல்ப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் அமெரிக்கா முன்மொழிந்துள்ளது.

**காரணங்கள் தேடும் போதுதான் உண்மையில் தவறுகள் செய்ய ஆரம்பிக்கின்றோம்.**

# பாரிஸ் மாநகரில் ஒலிம்பிக் கொண்டாட்டம்!

100 வருடங்களிற்குப் பின்னர் மீண்டும் பாரிஸ் மாநகரில் ஒலிம்பிக் கொண்டாட்டம்! 2024ம் ஆண்டு பாரிசில் ஒலிம்பிக் போட்டிகள் நடாத்த ஒலிம்பிக் சம்மேளனம் ஆமோதித்துள்ளது.

1992, 2008, 2012 என பலமுறை வேட்பாளராக பாரிஸ் நகர் போட்டியிட்ட போதும் பாரிஸ் நகருக்கான அங்கீகாரம் இதுவரை வழங்கப்படவில்லை எனவும், இந்த அங்கீகாரம் எதிர்வரும் 7 வருடங்களில் பிரான்ஸ் முழுவதும் விளையாட்டுத்துறையினரின் பலத்தை அதிகரிப்பதற்கான சிறந்த வாய்ப்பாக அமையும் எனவும் அதிபர் இம்மனுவல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

இரண்டு வருட கடுமையான உழைப்பிற்கு கிடைத்த பலனாக நான் இவ்வெற்றியை உணருகிறேன் எனத் தெரிவித்த பாரிஸ் நகர மேயர் ஆன் கிடல்கோ, இது எனது வெற்றியல்ல மாறாக இது பிரான்ஸ் மக்கள் அனைவரினதும் வெற்றியாகும் எனத் தெரிவித்துள்ளார்.

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் பிரான்சின் மூன்றாவது ஒலிம்பிக் போட்டிகளாகும். இதுவரை மூன்று போட்டிகள் நடாத்தி முன்னிலையிலிருந்த இங்கிலாந்துடன் பிரான்ஸ் இணைந்துள்ளது. அமெரிக்கா 5 போட்டிகளுடன் முதலாவது இடத்திலுள்ளது.






## பெயரை மாற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு

பிரான்சின் மேற்குப் பகுதியான Bretagneல் பிறந்த குழந்தைக்கு வைக்கப்பட்ட பெயரை மாற்றுமாறு பிரான்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

2017 மே மாதம் Quimper நகரில் பிறந்த ஆண் குழந்தைக்கு பெற்றோர் Fañch எனப் பெயர் வைத்தனர். பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் Fañch எனும் பெயரை அனுமதிக்க முடியாது என மாநகர சபை மறுப்புத் தெரிவித்தது. மாநகரசபையினரின் மறுப்பைத் தொடர்ந்து பெற்றோர் நீதிமன்றத் திற்குச் சென்றனர்.

Fañch எனும் பெயரில் 'n' இற்கு மேலே உள்ள அடையாளமே பிரான்சில் ஏற்க முடியாததற்கு காரணமாகும். இதை tilde என அழைக்கப்படுகின்றது. இப்படியான அடையாளமிடும் முறை பண்டைய Breton மொழி எழுத்தாகும். தற்போது Breton மொழியை 2 லட்சம் பேர் பேசுகின்றனர். பிரெஞ்சு மொழியில் இவ்வடையாளம் பயன்பாட்டில் இல்லை.

ஸ்பானிஸ் மற்றும் போர்த்துக் கேய மொழியில் இன்னும் பயன்பாட்டிலிருக்கும் tilde ஐ எமது தனித்துவம் மிக்க மொழியில் சேர்க்க முடியாது என நீதிமன்றம் விளக்கம் கூறித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பெயரை மாற்ற மாட்டோம்! இது எங்கள் அடையாளம் எனத் தொடர்ந்து போராடும் Breton பெற்றோருடன் Bretagne மொழி ஆர்வலர்களும் இணைந்துள்ளனர்.

# மீண்டும் வீதியில் பிரான்ஸ் மக்கள்






மீண்டும் ஒரு முறை தொழிலாளர் சட்ட மாற்றங்களை புதியதிருத்தங்களுடன் இம்மனுவல் மக்ரோனின் அரசு முன்வைத்துள்ளது. அரசின் புதிய திருத்தங்களை எதிர்த்து தொழிற்சங்கங்களும் மக்களும் வீதியில் இறங்கியுள்ளனர்.
2017 பிரான்ஸ் அதிபர் தேர்தலில் முதற்சுற்றில் தோல்வியைச் சந்தித்த France insoumise கட்சி வேட்பாளரான யோன் லூக் மெலஞ்சோனும், சோசலிசக்கட்சி வேட்பாளரான பெனுவா ஹமோனும் பேரணிகளை தலைமைதாங்கி வழிநடாத்தி வருகின்றனர்.

"மீண்டும் மக்கள் அதிருப்தியுடன் வீதியில் இறங்குவதற்கான முக்கிய காரணம் சோசலிசக் கட்சியும் பெனுவா ஹமோனுமேயாகும். சரியான நேரத்தில் பெனுவா ஹமோன் சரியான முடிவை எடுத்திருந்தால் இன்று நான் பிரான்சின் அதிபராகவும், பெனுவா ஹமோன் பிரதமராகவும் பிரான்ஸ் மக்கள் எதிர்பார்த்த இடதுசாரிய ஆட்சியை சிறப்பாக அமைத்துக் கொடுத்திருப்போம் என யோன் லூக் மெலஞ்சோன் தெரிவித்துள்ளார். நான் பெனுவா ஹமோனிடம் கேட்டுக்கொண்டது ஒன்றே ஒன்று தான், அவரை தேர்தலிலிருந்து விலகக் கோரியிருந்தேன். ஹமோனுக்கு சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்கத் தெரியவில்லை. இம்மனுவல் மக்ரோனும், பிரான்சுவா பைரூவும் முந்திக் கொண்டனர் எனப்பதிவு செய்துள்ளனர்.




## Ecole Nelly Ovadia

யூதக்குழந்தையின் நினைவாக..

பிரான்சில் மிகவும் அரிய நிகழ்வாக பாடசாலை ஒன்றிற்கு ஒரு யூதக்குழந்தையின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஜேர்மனிய நாசிப்படையினரின் முக்கிய வதை முகாமான Auschwitz ல் நச்சுப்புகை தாக்கத்தால் கொலை செய்யப்பட்ட 15 மாதக்குழந்தையே Nelly Ovadia. இது ஒரு வரலாற்று நிகழ்வாகும் எனத்தெரிவித்த மாநகரசபைத் தலைவர் ஒவ்வொரு வருடமும் மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் Nelly Ovadia வின் வாழ்க்கையை எடுத்துரைப்பதன் மூலம் ஒரு இனவாதமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலை பிரான்சின் தெற்கே அமைந்துள்ள Tourtour கிராமத்தில் அமையப்பெற்றுள்ளது.


XPRESS MONEY TRANSFER AGENT
எக்ஸ்பிரஸ் பணமாற்று நிலையம்

• எரிபொருள் நிரப்பு நிலையம் • பணம் அனுப்பும் சேவை • புத்தம்புதிய கைத்தொலைபேசிகள் • தொலைபேசி உதிரிப்பாகங்கள்

- விரைவாகவும் பாதுகாப்பாகவும் சர்வதேச ரீதியில் பணம் அனுப்பிக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும்
- அதிகூடிய மாற்று வீதம்
- குறைந்த சேவைக் கட்டணம்
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினூடான சேவை
- அனைத்து முகவர்களும் ஒரே இடத்தில்
- 2 நிமிடங்களில் எல்லா நாடுகளிலும் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்
- வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்ய

Ria Money Transfer · MoneyGram money transfer · WESTERN UNION MONEY TRANSFER · Sigue MONEY TRANSFER · TEMPO MONEY TRANSFER

லாச்சப்பலில்





நம்பிக்கை – நாணயம் – உத்தரவாதம்

Tél : 01 40 18 07 44
email : express-station@hotmail.com
25, Boulevard de la Chapelle 75010 Paris

Express Station Service 25 Bld. de la chapelle
Métro La Chapelle

# உலகை அச்சுறுத்தும் புயல்



**இந்த வருடம்** மீண்டுமொரு முறை பல புயல்கள் பூமியில் கோரதாண்டவத்தை ஆடி முடித்துள்ளன. வல்லரசு மூன்றாம் உலக நாடு என்று எந்தவித பாகுபாடுகளுமின்றி இயற்கை தனது சீற்றத்தைப் பதிவு செய்துள்ளது. பூமி வெப்பமடைதலின் எதிர்த்தாக்கமே இத்தனை புயல்கள் இத்தனை வானிலை மாற்றங்கள் என சூழல் பாதுகாப்புச் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர்.

செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் மட்டும் வெப்பமண்டலப் புயல்கள் என மிகவும் தாக்கங்களை ஏற்படுத்திய Irma புயல் அமெரிக்க ரெக்ஸ்சாஸ் மாநிலத்தில் Hervey புயல் Jose புயல் Katia புயல் என அணிவகுத்தன.

பிரான்சைப் பொறுத்தவரை Irma புயல் மேற்கிந்தியத் தீவுக்கூட்டத்தில் அமைந்துள்ள பிரான்சின் கடல் கடந்த மாகாணங்களில் ஒன்றான Saint-Martin தீவில் 95 சதவீதமான சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. மணிக்கு 365 கிலோமீற்றர் வேகமான காற்று தொடர்ந்து 33 மணிநேரங்கள் சுழன்றடித்து பல தீவுகளை நிர்மூலமாக்கியுள்ளது. பிரான்சிற்கு அதிக செலவீனங்களை ஏற்படுத்திய இயற்கை அழிவுகளின் வரிசை யில் Irma புயல் முதன்மையானதாகும். Saint-Martin மற்றும் Saint-Barthélemy தீவுகளில் மட்டும் ஏற்பட்டுள்ள சேதங்கள் 1, 2 மில்லியாட் யூரோக்களாகும்.

Hervey, Irma, Jose, Kati… என ஒவ்வொரு புயல்களுக்கும் ஒரு பெயர் சூட்டப்படுகின்றது. நினைவில் எளிதாக வைத்துக்கொள்வதற்கும் நிர்வாகத்திற்கு எளிதாகவும் இத்தகைய எளிமையான பெயர்கள் சூட்டப்படுகின்றன. இலக்கங்களுடனோ அல்லது தட்ப வெப்ப அளவுகளுடனோ குறிப்பிடும் போது நினைவில் வைத்துக் கொள்வது மிகவும் கடினமாகும். குறிப்பாக ஒரே நேரத்தில் ஒரே பகுதியில் பல புயல்கள் வீசும் போது.

இக்காரணங்களால் ஐக்கிய நாடுகள் சபையின் வானிலை பிரிவினரால் OMM (உலக வானிலை அமைப்பு) பல நீண்ட காலமாக புயல்களுக்கு பெயர் சூட்டி வருகின்றது.

- 18ம் நூற்றாண்டு பின்பகுதியிலிருந்து புயல்களுக்கு பெயர் சூட்டப்பட்டு வருகின்றது
- 20வது நூற்றாண்டு வரை மேற்கிந்திய தீவுப்புயல்களுக்கு அந்தந்த நாட்களின் புனிதர்களின் பெயர்கள் சூட்டப்பட்டு வந்துள்ளன.
- அவுஸ்திரேலியர்களோ தமக்கு பிடிக்காத அரசியல் தலைவர்களின் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்துள்ளனர்.
- இரண்டாம் உலகப்போர்க்காலங்களில் அமெரிக்க மாலுமிகள் தமது காதலிகள், மனைவிகளின் பெயர்களைச் சூட்டி அழகு பார்த்துள்ளனர்.
- 1950 முதல் அமெரிக்க வானிலையாளர்கள் ஒரு கட்டுக்குள் திட்டமிடலின் அடிப்படையில் பெயர்களை வழங்க ஆரம்பித்தனர்.
- 1953 முதல் பெண்களின் பெயரே புயல்களுக்கு சூட்டப்பட்டது.
- 1970 களில் அமெரிக்க பெண்கள் அமைப்புகள் புயல்களுக்கு பெண்களின் பெயரை சூட்டுவதை நிறுத்துங்கள்! பெண்கள் அத்தனை கொடூரனவர்களா? என தொடர்ந்த எதிர்ப்புகளைத் தொடர்ந்து 1979 முதல் ஆண் பெண் பெயர்கள் சமமாக சூட்டப்பட்டு வருகின்றன.
- ஒவ்வொரு கடல் பரப்புகள் புயல் உருவாகும் பகுதிகளை கண்காணிப்பதற்கான வானிலை அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.
- ஒரு வருடத்தில் உருவாகக் கூடிய புயல்களுக்கான பெயர்ப்பட்டியல் வருட ஆரம்பத்திலேயே பதிவு செய்யப்பட்டு பின் தொடரப்படுகின்றது.
- பெயர் வரிசை அகரவரிசைப்படி தொடரப்படுகின்றது. ஒவ்வொரு 6 வருடங்களுக்கு ஒரு முறை மீண்டும் அதே பெயர்கள் உபயோகப்படுத்தப்படும்.
- அதிக உயிர் பொருட்சேதங்களை உருவாக்கிய புயல்களின் பெயர்கள் மீண்டும் பாவிக்கப்படுவதில்லை. உதாரணமாக 2005ல் வட அத்திலாந்திக் பகுதியில் உருவகம் கொண்டு அமெரிக்காவில் 1836 மரணங்களையும், 108 மில்லியாட் டொலர் சேதத்தையும் உருவாக்கிய கத்ரினா (Katrina) புயல். இனி ஒரு போதும் புயல்களுக்கு கத்ரினா என்று பெயர் சூட்டப்படமாட்டாது.
- வெப்பமண்டலப்பகுதிக்கு மட்டும் வருடத்திற்கு 21 புயல்களின் பெயர் பதிவு செய்யப்படுகின்றது. 2005ல் புயல்களின் எண்ணிக்கை 21 ஐத் தாண்டியது.
- இதுவரை ஒரேயொரு முறை மட்டும் பதிவு செய்யப்பட்ட புயலின் பெயர் மாற்றப்பட்டது. 2016ம் ஆண்டிற்காகப் பதிவு செய்யப்பட்ட பெயர்களில் ISIS என்ற கிரேக்க கடவுளின் பெயரும் இருந்தது. இருப்பினும் ISIS என்பது பயங்கரவாத அமைப்பான Daesh அமைப்பின் ஆங்கில முதலெழுத்துக்களின் வரிசையாகும். ஒரு புயலை இவ்வாறு அழைக்க முடியாது என ஐநா கண்காணிப்பு குழு தெரிவித்தமைக்கு இணங்க ISIS எனும் பெயர் Yvett என மாற்றியமைக்கப்பட்டது.

## உட்கட்சி முதற்சுற்றுத் தேர்தல் தேவையில்லை!

எதிர்வரும் காலங்களில் பிரான்ஸ் அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவில் உட்கட்சி முதற்சுற்றுத் தேர்தல் தேவையில்லை என Les Républicains கட்சியின் 70 சதவீத ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய முதற்சுற்றுத் தேர்தல் முறையில் வாக்குப்பிரிவுகள் உட்கட்சித் துரோகங்கள் என ஒரு கட்சியின் வீழ்ச்சிக்கு வழிசெய்து விடுகின்றது. 2017 அதிபர் தேர்தல் நமக்கு நல்ல படிப்பினை எனவும் தெரிவித்துள்ளனர்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# Mahajana Master Institute - Paris.

# பாரிஸ் - மகாஜனா கல்வி நிலையம்

## 10வது ஆண்டு நிறைவில்....

## மேலும் 3 புதிய கிளைகள்..

CELEBRATING 10 YEARS



MAHAJANA Master Institute

மொத்தம் பத்துக் கிளைகள்

ஆங்கிலக்கல்வி
கற்றல் - கற்பித்தல் செயன் முறையில் நாம் பயன்படுத்தும்
**புதிய நுட்பங்களே எங்கள் வெற்றி!**



**Mahajana Master Institute-Paris**
15 rue Marie et Pierre Curie
89100 Sens
(நகரசபைக்கு அருகாமையில்)

**Mahajana Master Institute-Paris**
14 rue Mercator
77120 Lieusaint
(நகரசபைக்கு அருகாமையில்)

**Mahajana Master Institute-Paris**
Villeneuve St. Georges
(புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்)

### எமது கிளைகள்

1. La Courneuve 93
2. Cergy 95
3. Les Mureaux 78
4. Bondy 93
5. Goussainville 95
6. Boissy Saint Leger 94
7. Paris 75

PRIMAIRE (TOUT NIVEAU) | COLLEGE (TOUT NIVEAU) | LYCEE (TOUT NIVEAU)

- **COURS D'ANGLAIS** (Mercredis et Samedis)

Programmes de UNIVERSITY OF CAMBRIDGE / BRITISH COUNCIL

- Starters 7, 8 ans
- Movers 9, 10, 11 ans
- Flyers 12, 13 ans
- KET 13 ans et plus
- PET
- FCE

- **SOUTIEN SCOLAIRE** (Mercredis, Samedis et Dimanches)

(Tout niveau)

- Niveau Primaire (CP – CM2)
- Niveau Collège (6ème – 3ème)
- Niveau Lycée (2nd – Terminale)

- **COURS DE MATHEMATIQUES** (Samedis et Dimanches)
  - Niveau Collège (6ème – 3ème)
  - Niveau Lycée (2nd – Terminale)

- **COURS DE FRANÇAIS** (Samedis et Dimanches)
  - Niveau Collège (6ème – 3ème)
  - Niveau Lycée (2nd – Terminale)

**7, Rue Emile Zola, 93120 La Courneuve.**

RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்
Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

**Renseignements et Inscriptions au 06 11 68 82 50 / 06 28 61 28 63.**

# EGLISE EVANGELIQUE DE SION

## சீயோன் சுவிசேஷ சபை

## ஆலய இடமாற்றம்

புதிய முகவரி

**4 Avenue Armand Esders,**
**93150 Le Blanc-Mesnil**
(Leclerc drive அருகாமையில்)

*RER :* Blanc Mesnil
*Bus :* 620 இறங்குமிடம் : **Docteur Calmette**
609 - La Courneuve லிருந்து Le Bourget வழியாக..
இறங்குமிடம் : **Rond Point Pablo Neruda**
350 - Gare de L'est லிருந்து La Chapelle வழியாக..
இறங்குமிடம் : **Descartes - Renault**
627 - Aulnay S/Bois (Gare) லிருந்து
இறங்குமிடம் : **Rond Point Pablo Neruda**
610 - Gare de Dugny லிருந்து Le Bourget Air-port வழியாக..
இறங்குமிடம் : **Armand Esders**

RER லிருந்து வாகன ஒழுங்கும் செய்துதரப்படும்.

வாகனங்களில் வருபவர்களுக்கு
GPS : Z.I du Coudray / A1/A3/D40/ E15

**La Plaine St.Denis** ல் நடைபெற்ற ஆராதனை தற்போது புதிய முகவரியில் நடைபெற்று வருகிறது!

ஒவ்வொரு ஞாயிறும் மாலை **4.30 மணிக்கு**

தொடர்புகளுக்கு : 06.61.18.95.30 / 06.99.11.19.68 / 07.8358.89.40 / 06.51.12.65.85

உன்னிடமுள்ள மிகச் சிறந்ததை இவ்வுலகிற்கு கொடு.
அது போதுமானதாக இல்லாமல் இருக்கலாம்.
எது எப்படியானாலும் நீ பெற்றுக்கொண்டுள்ள மிகச்சிறந்ததை இவ்வுலகிற்கு கொடு! - அன்னை திரேசா

லாச்சப்பலில்..

# ASI BOUCHERIE

**சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும்**
**உங்கள் தேவைக்கேற்ப...**
**அனைத்து இறைச்சி வகைகளையும்**
**மொத்தமாகவும் சில்லறையாகவும்**
**பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்!**

**195, rue du Fbg. St Denis -75010 PARIS**
(Métro : La Chapelle ou Gare du Nord)



HALAL

Tél.: 01 42 05 23 78

# துயர் பகிர்வு

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்**



**அமரர்**
**சின்னத்துரை கனகம்மா**
(ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கு)
தோற்றம் : 30.06.1927
மறைவு : 31.07.2017



**செல்வன்**
**பகீதரன் சவரீஷ்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 21.12.2011
மறைவு : 19.08.2017



**அமரர்**
**சண்முகநாதன் அபிராஜ்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 03.04.1995
மறைவு : 30.07.2017



**அமரர்**
**தவரட்ணசிங்கம் அன்னலட்சுமியம்மா**
(வட்டுக்கோட்டை, பிரான்ஸ்)
தோற்றம் : 07.11.1938
மறைவு : 20.08.2017



**அமரர்**
**சின்னத்தம்பி சொக்கலிங்கம்**
(தெல்லிப்பளை, பிரான்ஸ்)
தோற்றம் : 13.11.1959
மறைவு : 03.08.2017



**அமரர்**
**காந்தலிங்கம் பிரதீபன்**
(நல்லூர் அரசடி, பிரித்தானியா)
தோற்றம் : 04.07.1975
மறைவு : 01.09.2017



**அமரர்**
**அன்பரசி ரட்ணராஜா**
(கனடா)
தோற்றம் : 23.06.1961
மறைவு : 04.09.2017



**அமரர்**
**செல்லையா சிவனடியான்**
(வட்டு. வடக்கு கலைநகர் . பிரான்ஸ்)
தோற்றம் : 23.06.1950
மறைவு : 06.09. 2017



**அமரர்**
**செபஸ்ரியாம்பிள்ளை ஆரோக்கியநாதர்** (பிரான்ஸ்)
தோற்றம் : 15. 03.1944
மறைவு : 14. 08. 2017

# முன்னாள் அதிபர்களை சந்தித்துவரும் அதிபர் மக்றோன்



பிரான்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோன் பதவிக்கு வந்த பின்னர் முன்னாள் பிரான்ஸ் அதிபர்களையும் அவர்கள் இல்லங்களுக்குத் தேடிச் சென்று சந்தித்து வருகின்றார்.

5 யூலை நிக்கோலா சார்க்கோசி தம்பதியினரைச் சந்தித்து உரையாடிய அதிபர் 21 யூலை வாழும் முன்னாள் அதிபர்களில் பிரான்சின் பிரபலமான அதிபரான ஜக் சிராக்கையும் அவரது மனைவியையும் அவர்களது இல்லத்திற்கு விஜயம் செய்து சந்தித்துள்ளார்.

இம்மனுவல் மக்ரோனின் வருகையால் மகிழ்ச்சியடைந்த ஜக் சிராக் பிரான்ஸ் அதிபருக்கு மிகவும் பிரத்தியேகமான நீண்டகாலமாக ஜக்சிராக் காப்பாற்றி வந்த பொருள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

வெண்கலத்தாலான ஜெனரல் டி கோலின் உருவப்படமே ஜக் சிராக்கின் அன்பளிப்பாகும். இவ்வுருவப்படம் ஜக்சிராக் பாரிஸ் மாநகரசபைத் தலைவராக இருந்த காலம் முதல் அதிபராக, முன்னாள் அதிபராக என இத்தனை காலமும் ஜக்சிராக்கின் அலுவலக மேசையை அலங்கரித்து வந்த உருவப்படமாகும். அவர்களின் அரசியல் சித்தாத்தங்கள் வெவ்வேறாக இருப்பினும் பிரான்ஸ் குடியரசின் ஆட்சி முறையில் ஜெனரல் டி கோலின் இருப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவே தான் நீண்டகாலமாக பாதுகாத்து வந்த டி கோலின் உருவப்படத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என ஜக் சிராக்கின் மகள் Claude Chirac தெரிவித்துள்ளார்.



# அந்தத் திமிர் எனக்குப் பிடித்திருந்தது!

என்னுடைய நண்பனுக்கு இளகிய மனது. வயோதிபர்கள், பிச்சைக்காரர்களைக்கண்டால் நின்று தடுமாறிக்கொண்டிருப்பான். அதிகம் கூச்ச சுபாவம். பிச்சை கொடுப்பதற்கு விருப்பமிருந்தாலும்கூட கூச்சப்படுவான். பிச்சைபோடும்போதும் யாராவது வருகிறார்களா என்று விழிகளை உருட்டி நோட்டம் விட்டபின் காசை எறிந்து விட்டு மெதுவாய் ஒரு பூனைக்குட்டியைப்போல நகருவான்.

இப்படித்தான் இன்றும். தெருவோரம் ஒரு செருப்புத்தைக்கும் தொழிலாளியைக் கண்டான். இவனுக்கு இரக்கம் சுரந்துவிட்டது. வழக்கம் போல் சுற்றிலும் நோட்டமிட்டபின் திருதிருவென்று முழித்தான். பின் ஒரு நாணயக்குற்றியை எடுத்து அவனை நோக்கி வீசிவிட்டுத் திரும்பினான்.

இரண்டடி நகர்ந்திருக்கமாட்டான்..

"யோவ்!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

"நான் இதில பிச்சை எடுத்துக்கொண்டிருக்ககேல்ல. தொழில் செய்யிறன். காசை எடுத்துக்கொண்டு போ..." அந்த வயது முதிர்ந்த மனிதன் உரத்த குரலில் அதிர்ந்தான்.

வாயில் குதப்பிய வெற்றிலை. குனிந்ததலை. விறைப்பாய் விழுந்தன சொற்கள்.

நாங்கள் சிலையானோம். அந்த முதிர்ந்த மனிதனின் காலடியில் நாணயக்குற்றி வெருண்டுபோய்க் கிடந்தது...

– அசோகா –
5.9.2017



**சின்னட்டிக்கதை**







## விற்பனைக்கு வந்த சோசலிசக்கட்சி அலுவலகம்!

வரலாற்று பெருமைமிக்க சோசலிசக்கட்சியின் அலுவலகம் விற்பனைக்கு வந்துள்ளது. rue Solférino வில் அமைந்துள்ள 3000m² அலுவலகத்தின் ஆரம்ப விலை 23 முதல் 70 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மித்திரனின் காலகட்டத்தில் இடது சாரிகளின் கோட்டையாக விளங்கிய Solférino அலுவலகம் சோசலிசக்கட்சியின் மீளுருவாக்கத்திற்குத் தேவைப் படும் பல மில்லியன் யூரோக்களை ஈடுகட்டுவதற்காக விற்கப்படுவதாக கட்சியின் பொருளாளர் தெரிவித்துள்ளார்.

---

**எதிரபார்ப்புகள் அதிகமாகும்போதுதான் வேதனையும் அதிகமாகிறது!**


TRT

Tel (office) : 0033 148371675
Fax : 0033 148450956
For Live Programs: 0033 148321540
FB : TRT TAMIL OLLI
Mail : trtnews@hotmail.fr
Website: : www.trttamilolli.com
TRT Tamil Oli



மண்டைதீவு திருவெண்காடு
சித்திவிநாயகர்
ஆலய இணைய முகவரி


thiruvenkadumandaitivu.com






காக்கைச் சிறகினிலே மாத இதழ்
முன்னெடுக்கும்
கவிஞர் கி பி அரவிந்தன்
நினைவு இலக்கியப் பரிசு
'உலகத் தமிழ்க் குறுநாவல் போட்டி 2018'
தொடர்புகளுக்கு :
kipian2018kaakkaicirakinile
@gmail.com


## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – இல. 31



3. வழி (2)
4. உழுவதற்கு உதவும் (4)
5. காகத்தின் கூட்டில் முட்டையிடும் (3) (குழம்பியுள்ளது)
6. நீர் நிலைகளின் கரைகளில் செழித்து வளரும் தாவரம், மலரை பெண்கள் தலையில் சூடிக்கொள்வர் (2)
8. பெண் (4) (குழம்பியுள்ளார்)
9. இது தனித்து நின்றால் பெறுமதி இல்லை (5)
11. தேர்தல் தருணங்களில் வழங்கப்படுவது (5)
12. வசை அல்லது திட்டு (3)
14. உலகம் (2) (திரும்பியுள்ளது

*இடமிருந்து வலம்....*

1. தொலைவில் நிலத்தை தொடுவது போல் தோன்றும் வானம் (5)
3. யானை இவன் சொல் தான் கேட்குமாம் (3)
7. கர்ப்பிணிப்பெண்கள் இப்பூவைச்சாப்பிட்டால் குழந்தை சிவப்பாக பிறக்கும் என்பது நம்பிக்கை (6)
10. வாசல் (5)
13. நவீன வர்த்தக முறை, இங்கு பங்குகள் வாங்கலாம் (7)
15. இப்பூண்டை மிதித்தால் வழி தொலைந்து விடுமாம் (6)

*மேலிருந்து கீழ்...*

1. மனிதனின் அறிவியல் நுட்பத்தின் வளர்ச்சியை இவ்வாறும் அழைக்கலாம் (7)
2. மரத்தாலான ஆசனங்களில் ஒன்று (3)

✔ *உங்கள் பதில்களை 10 கார்த்திகை 2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்*

**நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.30ல் பரிசு பெறுபவர்கள்.**

*1. வினோதினி தர்மராஜா – ஆயடயமழகக 92240*
*2. நிர்மலா நடேஸ்வரன் – யுவெழலெ*
*3. ஜெயராஜ் – ளுயசஉநடடநள 95200*

**சரியான விடை எழுதியவர்கள் :**

- *நவநீதன்.* J - Bois Colombes
- *புனிதன் பத்திநாதன்* - Vitry sur Seine
- *ஜெனிற்றா.* R - Sevran
- *ராகினி தேவராஜன்* - Fontenay aux Roses
- *வி.சு.சத்தியமூர்த்தி – பாரிஸ் 12*
- *த. மனோஜ்குமார்* - Châtillon 92320

**போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !**

## Neymar da Silva Santos Junior !




பிரேசிலின் புதிய உதைபந்தாட்டக் கடவுள் என வர்ணிக்கப்படுகிறார். இன்று 25 வயதாகும் Neymar பார்சலோனா கழகத்திலிருந்து "கட்டார்" முதலீட்டில் திளைக்கும PSG அணிக்கு தற்போதைய நிலையில் அதி உயர் விலையான 220 மில்லியன் யூரோக்களுக்கு விற்பனையாகியுள்ளார்.

Neymar, PSG அணியில் இணைகிறார் என்ற அறிவிப்பு வந்த முதலாவது நாளில் மட்டும் Neymar ன் பெயர் பொறித்த ரீசேட் வாங்குவதற்காக 2 கிலோமீற்றர் நீளமான வரிசையில் மக்கள் PSG விற்பனை நிலையத்தின் முன்னர் காத்திருந்தனர். இன்னமும் வரிசை தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

பரிமாற்ற கொடுப்பனவு 220 மில்லியன் யூரோக்கள், வருடாந்த வருமானம் 30 மில்லியன் யூரோக்கள் என ஒப்பந்தமாகியுள்ளார்.

## 220 மில்லியன் யூரோக்களுக்கு..

- 20 பேர் வரை பயணிக்கக்கூடிய சொகுசு விமானமான Falcon 7X ஐந்து வாங்க முடியும். ஒன்றின் விலை 40 மில்லியன் யூரோக்கள்.
- ஒரு Airbus A330-200 வாங்கமுடியும். விலை 180 மில்லியன், மிச்சக்காசு 40 மில்லியனுக்கு ஒரு சின்ன Falcon 7x ம் வாங்கலாம்.
- உலகின் அதிவேகமான காரான Bugatti Veyron மணிக்கு 432 கிலோமீற்றர் வேகத்தை எட்டும். Bugatti Veyron கார்களில் 134 கார்கள் வாங்கமுடியும். ரொனால்டோ மற்றும் பென்செமா ஆகியோரின் காரும் இதுதான்.
- அமெரிக்காவில் மிக அதிக விலைக்கு விற்பனையான வீட்டை வாங்க முடியும். Los Angeles நகரில் Bel-Air பகுதியில் 3500 m2 அமைந்துள்ள இவ்வீட்டின் மதிப்பு 211 மில்லியன் யூரோக்களாகும்.
- Neymar ன் பெயரில் தயாராகி வெளியாகியுள்ள Nike சப்பாத்துகள் 1594203 வாங்கலாம்.
- 2588235, PSG கழக ரீசேட்கள் வாங்கலாம். பாரிஸ் மக்கள் தொகையான 2244 மில்லியன் பேருக்கு அன்பளிப்பாக வழங்க முடியும்.
- பிக்காசோவின் ஓவியமான Les Femme d'Alger வாங்க முடியும் ஓவியங்களில் மூன்றாவது விலை அதிகமான ஓவியமான இவ் ஓவியத்தின் தற்போதைய விலை 161, 6 மில்லியன் யூரோக்களாகும்.

இவற்றையெல்லாம் விட இந்த 220 மில்லியன் யூரோக்கள் என்பது அடிப்படைச்சம்பளம் எடுப்பவரின் 15955 வருடச் சம்பளமாகும்.

**பிரான்சில்**

**மேலதிக கடனுக்கு உட்பட்டிருப்பவர்**

(Surendettement)

# என்ன செய்யலாம்?



வீடு மற்றும் தனிப்பட்ட கடன்கள் அல்லது மாதாந்த கட்டணங்களைக் கட்ட முடியாமல், அதிலிருந்து மீள முடியாமல் வட்டி– வட்டிக்கு குட்டியெனக் கழுத்துக்கு மேலே நிரம்பிய கடன் தொல்லைகளால் இக்கட்டான நிலையை அனுபவிக்கும் பட்சத்தில் நீங்கள் அரசின் service-public.fr எனும் இணையத் தளத்திலுள்ள 'Commission de Surendettement des particuliers' ஐ நாடலாம்.

நீங்கள் செய்ய வேண்டியது இது தான்.

- உங்கள் வருமானத்தையும் அன்றாடச் செலவுகளையும் தற்போதுள்ள தங்கள் மீள முடியாத கடன் தொகையையும் விளக்கும் வகையில் ஒரு கடிதத்தை தயார்படுத்துங்கள்.
- 'Banque de France' க்கு நேரடியாகச் சென்று 'Déclaration de Surendettement' எனும் படிவத்தைப் பெற்றுத் தங்கள் எல்லாக் கடன்களையும் வெளிப்படையாகத் தெரியப்படுத்துங்கள்.
- தொடர்பு கொள்ளக் கூடியதான தொலைபேசி இலக்கத்தையும் முகவரியையும் சமர்ப்பியுங்கள்.
- 'Commission de Surendettement' என்ற குழு, தங்கள் கோரிக்கையை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், அதற்கான முடிவுகளையும் வழிமுறைகளையும் முன்மொழியும்.
- தங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை "ஏற்றுக் கொள்ளக் கூடியது" (Recevable) அல்லது "இல்லை" (Pas recevable) என்பதை மூன்று மாத காலத்துக்குள் அக்குழு பதிவுத் தபாலில் உங்களிடம் தெரிவிக்கும்.
- கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில், இரண்டு வருட கால அவகாசம் தரப்பட்டு கடன்களை இலகுவில் கட்டுவதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு வழி வகை செய்யப்படும்.

– கடன் சுமையிலிருந்து விடுபடுங்கள்.

– Luxman Vithyah

இன்னும் PSG அணி தவிர பிரான்ஸ் Ligue 1 ல் விளையாடும் இன்னுமொரு அணியான பிரான்சின் வடக்கே அமைந்துள்ள Amiens அணியின் 8, 5 வருட பட்ஜெட் ஆகும். Amiens அணியின் இவ்வருட செலவீனமாக 26 மில்லியன் யூரோக்கள் கணக்கிடப்பட்டுள்ளது.

**ஒப்புவித்தலுக்கும் கற்பித்தலுக்கும் இடையில் பெருவித்தியாசம் உண்டு. ஒப்புவிக்கும் ஆசிரியர்களிடம் கற்கும் குழந்தைகள் பரிதாபத்திற்குரியவர்கள்.**



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு


IESW GUIDANCE CELL
SOCIAL WORK EDUCATION
TEACHING EXCELLENCE & EDUCATIONAL INNOVATION.
CAMBRIDGE UNIVERSITY PREPARATION CENTRE 2017
கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி மூலம்
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை (மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்)
நீங்களே உருவாக்கிகொள்ளமுடியும்
Common European Framework of Reference :
YLE (Starters, Movers, Flyers), Key, Preliminary, First & Advanced... Etc.
Educational Centres:
Paris - Neuilly-Plaisance - Bondy - Melun - Chelles - Louvre
DESIGN & TEACH A COURSE
- Attitudes & Motivation.
- Prerequisite knowledge & preparedness.
- Group skill & applying knowledge.
- Speaking and writing productive skills
வீட்டிலிருந்தே படிக்கலாம்!
உங்கள் பிள்ளைகளுக்காக
கேம்பிறிஜ் பல்கலைக்கழக
கற்கைநெறி வகுப்புகள்
CREATING A BETTER WORLD - THROUGH
EDUCATION FOR OUR CHILDREN.
EDUCATIONAL ADVOCACY
- EDUCATIONAL IS THE MOST POWERFUL WEAPON,
WE CAN USE TO CHANGE THE WORLD
- NELSON MANDELA -
UNIVERSITY OF CAMBRIDGE
BRITISH COUNCIL
Cambridge English
Young Learners
Tel.: 07 53 76 76 45 - 07 81 34 99 72 - 07 69 68 80 42 - 07 51 33 58 97
06 99 32 72 82 - Email: iesw@live.fr


PARADISE
Travels
நீங்கள் உல்லாசமாய் பறக்க...
ஆண்டு முழுவதும்
அனைத்து நாடுகளுக்கும்
குறைந்த கட்டணம்!
றொரன்ரோ - 540€
மொன்றியல் - 580€
மலேசியா - 560€
சிங்கப்பூர் - 480€
பாங்கொக் - 550€
டென்மார்க் - 240€
கத்தானியா - 190€
சென்னை
430€
கொழும்பு
480€
வீசா ஒழுங்குகள் செய்து தரப்படும்
இந்திய வீசா 80 யூரோ மட்டுமே!
48, Rue Louis Blanc - 75010 Paris
Tél : 09 83 34 08 80 / 09 83 34 65 95
e-mail: paradisetravel10@yahoo.fr
M°: La Chapelle, Gare du Nord, Louis Blanc ou Stalingrad


Poopathy
அம்மாவின் கைப்பக்குவம்
தாயகத்தில் பூநகரியிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
மொட்டைக்கருப்பன் அரிசி
அம்மாவின் கைப்பக்குவத்தில்...
தற்பொழுது உங்கள் அபிமான
வர்த்தக நிலையங்கள் அனைத்திலும்...
Imported & Distributed by :
5, Rue de la Prévoté
93120 La Courneuve
09 82 40 36 47
NORTHNEAST
Le goût de votre origine
Poopathy
100% Pure
Mottakaruppen Rice
Riz Mottakaruppen
Reis Mottakaruppen
மொட்டைக்கருப்பன் அரிசி
POONAGARI SRI LANKA
10kg

# ஆதரவற்ற நிலையில் ரொஹிங்கிய மக்கள்..




பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் மியான்மாரில் (முன்னாள் பர்மா) ரொஹிங்கிய இஸ்லாமியர்கள் மியான்மாரின் மேற்குப்பகுதியில் ரகைன் மாநிலத்தில் வசிக்கின்றனர். 6 கோடிக்கும் அதிகமான மக்கள் வாழும் மியான்மாரில் ரொஹிங்கிய மக்களின் தொகை 4 சதவீதம் மட்டுமே. மிகவும் ஏழ்மையில் வாழும் இந்த இஸ்லாமிய மக்களை மியான்மார் அரசு ஒரு போதும் தமது நாட்டவராக கண்டு கொண்டதில்லை. அவர்களை "வங்காளிகள்" இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் எனப் பல தசாப்தங்களாக ஒடுக்கி வருகின்றது.

1962ம் ஆண்டு ராணுவப் புரட்சியின் பின்னர், மியான்மாரில் கடந்த 55 ஆண்டுகளில் பல முறைகள் ரொஹிங்கிய மக்கள் மீது கொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு முறையும் மக்கள் கொத்து கொத்தாக அகதிக ளாக பங்களாதேஸ், இந்தியா, தாய்லாந்து, அவுஸ்திரேலியா என அலைந்த வண்ணமே உள்ளனர். 2012ல் ரொஹிங்கிய பெண் ஒருவர் மூன்று மியான்மார் இளைஞர்களால் வன்புணர்ச்சிக்குட்படுத்தப் பட்டு கொலை செய்யப் பட்டார். இதை தொடர்ந்து கிளர்ந்த கலவரத்தில் நிராயுத பாணியான ரொஹிங்கிய மக்கள் இராணுவத்தினரால் கொன்றொழிக்கப்பட்டனர்.

கட்டுக்கடங்காத கலவரத்தால் அவசரகாலச்சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. அன்று முதல் முறையாக சர்வதேசத்தின் பார்வை ரொஹிங்கிய மக்கள் மீது விழுந்தது.

தொடரும் ராணுவ ஒடுக்கு முறைகளை எதிர்த்து ரொஹிங்கிய மக்கள் இராணுவம் என இயக்கம் ஒன்று தோற்றம் பெற்றது. ஆயுத எதிர்ப்பை எதிர்பார்க்காத மியான்மார் இராணுவம் இன்னும் கொடூரமாக மக்களைக் கொன்று குவிக்கத் தொடங்கியது. ஆகஸ்ட் பிற்பகுதியில் இரண்டு வாரங்களில் மட்டும் பல ஆயிரம்
மக்கள் வயது வித்தியாசங்கள் இன்றிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். 370000 மக்கள் ஆதரவற்ற நிலையில் தமது நாட்டிலும் சரி பங்களாதேஸ், இந்தியா மற்றும் அண்டைய நாடுகளிலும் அடிப்படை வசதிகள் இன்றி அகதிகளாக்கப்பட்டு உள்ளனர்.

அகதிகளாக ஏற்றுக்கொள்ளவும் பல நாடுகள் மறுப்புத் தெரிவித்துள்ளன. குறிப்பாக இந்தியா, தாம் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஏற்புக்கோப்பில் கையொப்பமிட வில்லை எனக்காரணம் காட்டி ரொஹிங்கிய அகதிகளை இந்தியாவை விட்டு வெளியேற்று வதிலேயே கருத்தாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் அரசசார்பற்ற அமைப்புகள் மட்டுமே அகதிகளுக்கு தம்மால் இயன்ற உதவிகளை வழங்கி வருகின்றனர். வரும் அகதிகளில் 60 சதவீதமானவர்கள் குழந்தைகளே எனத் தெரிவித்துள்ள யுனிசெவ் ஐக்கிய நாடுகள் சபையை உடனடி நடவடிக்கைகள் எடுக்கக் கோரியுள்ளது.

மியான்மார் அரசியல் தலைவர்களில் ஒருவரும், அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான *Aung San Suu Kyi* ன் மௌனம் பலரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது. பௌத்த மதத்தவரான *Aung San Suu Kyi* இன்றைய மியான்மார் அரசபீடத்தில் முதன்மையானவரும் கூட. சமாதானத்துக்கான நோபல் பரிசு வென்றவரும், திபேத்திய பௌத்த மதத் தலைவருமான *Dalai Lama* பலமுறை *Aung San Suu Kyi* தொடர்பு கொண்டும் எந்தவித பலனையும் கொடுக்கவில்லை.

மற்றுமொரு சமாதான நோபல் பரிசு வெற்றியாளரான பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலாவும் *Aung San Suu Kyi* ஐ கடுமையாகச் சாடியுள்ளார்.

ஒன்றுகூட்டப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்று கூடலுக்கு *Aung San Suu Kyi* சமூகம் கொடுப்பதாக இருந்து, கடைசி நிமிடத்தில் தனது வரவை ரத்துச் செய்துள்ளார். நோபல் பரிசு வென்றபோது நான் இச்சிறுபான்மை இனத்தினரின் நலனுக்காக பாடுபடுவேன் எனத் தெரிவித்திருந்தார், இருப்பினும் அவர் தனது சத்தியத்தை காப்பாற்றத் தவறிவிட்டார் எனத் தெரிவித்த மனித உரிமைகள் தொடர் ஐ.நா உயர் அதிகாரி *Zeid bin Ra'ad Zeid al-Hussein* ரொஹிங்கிய இஸ்லாமிய மக்களுக்கு நடப்பதும் ஒரு இன அழிப்பே என அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு









லாச்சப்பலில்!

# சங்கீதா அச்சகம்












**Tél.: 01 44 72 08 94**
E-mail : sangeethafrance@gmail.com
39, Bd de la Chapelle - 75010 Paris
M° Ligne 2 : La Chapelle